தேசிய விஞ்ஞான மன்றம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 53 இன் படி, ஒப்பிட்டுத் தகவலுக்கான முந்தைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்ட அனைத்து எண் தகவல்களும் வெளியிடப்பட வேண்டும். ஆயினும், முந்தைய	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பிட்டு இலக்கங்கள் நிதிக் கூற்றுக்களில்

	ஆண்டின் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை.		வெளியிடப்படல் வேண்டும்.
(ஆ)	முந்தைய காலப் பிழைகளைச் சரிசெய்யும்போது, பிழை ஏற்பட்ட காலத்திற்கான ஒப்பீட்டு மதிப்புகள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பந்தி 47 இன் படி மீண்டும் குறிப்பிடப்பட வேண்டும். இருப்பினும், நிறுவகம் முந்தைய காலத்துடன் தொடர்புடைய ரூபா.5,041,066 மதிப்புடைய பிழைகளின் ஒப்பீட்டு மதிப்புகளை மீண்டும் குறிப்பிடவில்லை அல்லது பத்தி 54 இன் படி தேவையான வெளிப்படுத்தல்களை வழங்கவில்லை.	வரும் ஆண்டு (2025) முதல், அவற்றை வெளிப்படுத்தல்களின் கீழ் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.	முந்தைய காலப் பிழைகளைச் சரிசெய்யும்போது, பிழைகள் ஏற்பட்ட காலத்திற்கான ஒப்பீட்டு மதிப்புகள், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின்படி மீண்டும் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 92 இன் படி முழுமையாகத் தேய்வடைந்தும் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் மொத்தக் கொண்டுசெல்லும் தொகை ரூபா. 101,951,683 நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை. மேலும், முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ரூபா. 8,794,179 தொகையான அருவச் சொத்துக்கள் தொடர்பான தேவையான தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை.	கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறோம்.	முழுமையாகத் தேய்வடைந்த மற்றும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டும் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் மொத்தக் கொண்டுசெல்லும் தொகையானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்படல் வேண்டும்.

(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் கீழ் திறைசேரியிடம் இருந்து பெறப்பட்ட மானியங்கள் நிதிச் செயலாற்றல்க் கூற்றில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகமானது குறித்த மானியங்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இற்கிணங்க ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகவும் கணக்கிட்டிருந்தது. இதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் ரூபா. 46,547,611 தொகையான நடைமுறையல்லாப் பொறுப்பு அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், குறித்த மானியங்களைப் பயன்படுத்தி கொள்முதல் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மீதான தேய்மானமும் வருமானமாகக் கருதப்பட்டு, மொத்தமாக ரூபா. 4,487,658 தொகையில் வருமானம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை.	பெறப்பட்ட மானியமானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் கீழ் நிதிச் செயலாற்றல்க் கூற்றில் வருமானமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 14 இன் பந்தி 34 இன் படி , முக்கிய நிர்வாகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டை வெளியிட வேண்டும். இருப்பினும், அந்தத் தகவல்கள் நிதி அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை.	கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறேன்.	முக்கிய நிர்வாகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளியிடப்பட வேண்டும்.
(ஊ)	”ஆணை 06” இன் கீழ் வாங்கப்பட்ட மூலதன சொத்துக்கள் ஒரே நேரத்தில் ஒரு செலவாகவும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாகவும் கணக்கிடப்பட்டதால், மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா.8,196,023 ஆல் அதிகரித்துள்ளது.	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை.	கொள்வனவு செய்யப்பட்ட மூலதன சொத்துக்கள் சொத்து, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிறுவகமானது இலங்கை நனோதொழில்நுட்ப நிறுவனத்தில் (SLINTEC) செய்துள்ள ரூபா. 883,002,124 தொகையான கூறப்பட்ட முதலீட்டின் இருப்பு மற்றும் உரிமையைச் சரிபார்க்க, பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு பொருத்தமான போதுமான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இது தொடர்பாக SLINTEC உடன் சரிபார்த்து, விடயத்தைச் சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்போம்.	ரூபா.883,002,124 தொகையான முதலீட்டின் இருப்பு மற்றும் உரிமையைச் சரிபார்க்க, பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு பொருத்தமான போதுமான சான்றுகள் உடனடியாகக் கணக்காய்வுக்கு வழங்கப்படல் வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத கௌதீகச்சான்று

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
ரூபா. 8,868,143 தொகையான அலுவலக உபகரணங்கள்) ஆண்டின் போது பௌதீக ரீதியாகச் சரிபார்க்கப்படவில்லை.	அவதானிப்புடன் உடன்படுகிறோம். நிலையான சொத்துக்களின் அலுவலக உபகரணப் பிரிவை இணக்கப்படுத்துவதில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். ரூபா. 98,956,510 பெறுமதியான சொத்துக்களை பௌதீக ரீதியாகச் சரிபார்த்துள்ளோம். பல காரணங்களால், ரூபா. 8,868,143 தொகையான சொத்துக்களைப் பௌதீக ரீதியாக அடையாளம் காண்பதில் சிரமங்களை எதிர்கொள்கிறோம்.	பௌதீக ரீதியாகச் சரிபார்க்கப்படாத அலுவலக உபகரணங்கள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவு	நிறுவகமானது வருமான வரிக்கோ அல்லது வரி விலக்கினைப் பெறுவதற்கோ பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.	NSF வருமான வரிக்கு பதிவுசெய்திருக்கவில்லை.	இறைவரித்திணைக்களச் சுற்றறிக்கைகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	(i) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையால் சீராக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 756 ஆம் நிதிப்பிரமாணம்.	மீளாண்டிற்கான பொருள் கணக்கெடுப்புச் சபையின் கணக்காய்வாளர் அதிபருக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், கணக்கெடுப்பின் போது பயன்படுத்த முடியாத பொருட்கள் என அடையாளம் காணப்பட்ட பொருட்கள் 2022ஆம் ஆண்டு முதல் அகற்றப்படவில்லை	2024 ஆம் ஆண்டிற்கான பொருள் கணக்கெடுப்புச் சபை குழுக்களுக்கான முகாமைத்துவச் சபையின் அனுமதி 2025 சனவரி முதல் வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் 15ஆம் திகதி அன்றும் அல்லது அண்ணளவாக பொருள் கணக்கெடுப்புச் சபை குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	பொருள் கணக்கெடுப்புச் சபையின் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அடையாளம் காணப்பட்ட பயன்படுத்த முடியாத பொருட்கள் அகற்றப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 876(1) ஆம் நிதிப்பிரமாணம்.	NSF அபிவிருத்தி நிதியம் நிறுவகத்தால் ஸ்தாபித்துள்ளதுடன், திறைசேரியின் அனுமதி இன்றி ரூபா. 327,701 தொகையை நிதியத்திற்கு செலவு வைத்துள்ளது.	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை. .	நிதியத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான உத்தியோகபூர்வ அனுமதி திறைசேரியிடம் இருந்து பெறப்படல் வேண்டும்..
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது	நிதியாண்டு முடிந்த பிறகு 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை	கடுமையான ஊழியர் பற்றாக்குறை காரணமாக, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான	செயற்பாட்டு வழிகாட்டிக்கு அமைய, ஆண்டறிக்கைகள்

	முயற்சிகள் சுற்றறிக்கையால் அறிமுகப்படுத்தப் பட்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவகங்களிற்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவு.	பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆயினும், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆண்டறிக்கை தயாரிப்பது தாமதமானதுடன், தெரிவு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் அப் பணியை நிறைவு செய்ய நீண்ட காலம் எடுத்துக்கொண்டனர். ஆயினும், 2022ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி பெறுவதற்காக 2024 ஆகஸ்ட் மாதம் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.	ஆண்டின் முடிவிலிருந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(உ)	2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை	2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்ட 29 ஆராய்ச்சிக் செயற்திட்டங்களுக்காக மன்றமானது ரூபா. 119,161,136 ஐப் பெற்றுள்ளது. குறித்த வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர், அத்தகைய ஏற்பாடுகளிலிருந்து ரூபா. 5,519,522 எஞ்சியிருந்தது. எஞ்சிய தொகைகள் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தாலும், மன்றத்தினால் அது அனுப்பப்படவில்லை.	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை.	மானியத் தொகையை உடனடியாகத் திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,081,473 தொகையான பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 21,234,344 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 16,152,871 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்கள் சம்பளங்கள் ரூபா. 12,837,325 ஆல் மற்றும் மூலதனச் செலவீனங்கள் ரூபா.43,589,827 ஆல் அதிகரித்தமையுடன் ஒப்பிடும்போது திறைசேரி மானியங்கள் ரூபா. 75,058,196 ஆல் அதிகரித்தமையே இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகவிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 நிதியாண்டிற்கான ஆறு ஆராய்ச்சிக் கட்டளைகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூபா. 270 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா. 69 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதியை இவ்வளவு குறைவாகப் பயன்படுத்தியமை, செயற்திட்டத் திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுவதில் உள்ள இயலுமை குறைந்த திறன் குறித்து கவலைகளை எழுப்புகிறது.	ஆண்டின் பிற்பகுதியில் NSF ஆனது முகாமைத்துவச் சபை இல்லாமல் இயங்கியது. அப்போது அதிகளவான நிதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லாமையானது NSF இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. முதல் கட்ட நிதி எங்களுக்கு யூன் மாதத்திலேயே கிடைத்தது. அரை ஆண்டு கடந்துவிட்டதால், வரவு செலவுத் திட்டத்தில் பணியாற்ற எங்களுக்கு ஆறு மாதங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. தற்போதுள்ள கொந்தளிப்பான சூழ்நிலைகளில், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுறுசுறுப்பான ஆய்வாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால், எதிர்பார்த்ததை விடக் குறைவான மானிய விண்ணப்பங்களும், தரக் குறைவான விண்ணப்பங்களும் கிடைத்தன. இது முன்னறிவிக்கப்பட்டதல்ல மற்றும் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.	நடைமுறைச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வரவு செலவுத் திட்டங்களும் திட்டங்களும் தயாரிக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	பணப் புத்தகத்தின் செலவு மீதியில் மூன்று வருடங்களாக நிலுவையில் உள்ள ரூபா. 2,045,055 தொகையும், ஆறு வருடங்களாக நிலுவையில் உள்ள ரூபா. 851,287	ரூபா. 2,045,055 தொகையான செலவு மீதியானது ருகுணு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட கறுவா செயற்திட்டத்திற்கான முதன்மை கைத்தொழில் அமைச்சுக்குச்	மீதமுள்ள தொகையைத் தீர்ப்பதற்கு அல்லது பொருத்தமான முறையில் முதலீடு

தொகையும் அடங்கும். இந்த நிலுவைகளைத் தீர்க்க அறக்கட்டளையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	செலுத்தப்பட வேண்டிய பணத்தைக் கொண்டுள்ளது. இது நிதிக் கூற்றுக்களில் மிகைச்செலவை அறிவித்துள்ளது. NSF ஆனது குறித்த தொகையுடன் உடன்படவில்லை. சரியான கூற்றுக்கள் கிடைத்தவுடன், அதைக் கூடிய விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். நிதியத்தின் மானியம் வழங்கப்பட்ட இறுதி முன்னேற்ற அறிக்கை மற்றும் நிதிக் கூற்று என்பவற்றின் மதிப்பீடு நிறைவு செய்யப்படாத காரணத்தினால், மீதமுள்ள தொகையைத் திருப்பியளிக்க முடியவில்லை.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2024ஆம் ஆண்டிற்கான NSF செயல் திட்டத்தின் படி, இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் 07 சந்தர்ப்பங்களில் 8.5 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை குறைந்துள்ளது.	முகாமைத்துவத்தினால் பதில் அளிக்கப்படவில்லை.	நடைமுறைச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் படி, இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.